Registered No. M. 878.

ॐ

सत्यात् नास्ति परो धर्मः

# பூர்ணசந்திரோதயம்.

---

**A Tamil Monthly Journal**

*Devoted to Theosophy, Religion, Science, Art and Civilization*

---

தொகுதி 6 | 1915௵ மே௴ ராக்ஷஸ௵ வைகாசி௴ | பகுதி 1

அ. ரங்கஸ்வாமி ஐயர், B.A., B.L., F.T.S, பத்திராதிபர்.

வருஷ சந்தா ௹ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை:

விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy Right Reserved.

பொருளடக்கம்

CONTENTS.

| | | பக்கம். |
|---|---|---|
| 1. | தற்கால நிலைமை—அ. ரங்கஸ்வாமி ஐயர். B.A.,B.L., F.T.S.<br>From the Editor—A. Rangaswamy Iyer B.A.,B.L., F.T.S. | 1 |
| 2. | ஸூக்ஷ்ம சரீரிகளான மஹோபகாரிகள்—ஆத்மாராம்<br>Invisible Helpers—Atma Ram | 8 |
| 3. | ஜகத்குரு வரும் வரை—R. சேஷாசாரி<br>Till he come—R. Seshachari | 13 |
| 4. | ஆசையை ஒழியுங்கள்-வி விசுவநாத ஐயர் B.A.,B.L., F.T.S.<br>Kill out Ambition—V. Visvanatha Iyer B.A.,B.L., F.T.S. | 18 |
| 5. | மருகுரு தோத்திர சோடச கலாமாலை } M. வேதநாயகஸ்வாமிகள்<br>Verses on Master M.—M. Vedanayaga Swamigal | 22 |
| 6. | சமாசாரம்<br>News | 27 |
| 7. | சிறுவர்க்குரிய விஷயம்—வஸந்தாநந்தன்.<br>Children's Corner—Vasanthananda. | 29 |
| 8. | தியானக்கிரம விஷயம்—கே. யஸ். இராமசந்திர ஐயர்<br>Meditations—K. S. Ramachandra Iyer | 33 |

---

## *Ready for Sale.*

*The English Translations of:—*

**Thirty Minor Upanishads Rs. 3-8-0**

**Laghu Yoga Vasishta Rs. 2-0-0**

**Professor Bergson & the Hindu Vedanta } Rs. 0-4-0**

**without postage.**

The above Upanishads, except one or two have never before been published in a book-form. Please apply to:—

**K. Narayanasamy Iyer Esq.,**
Theosophical Society, Adyar, Madras.

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 6 { 1915ஹு மேமீ / ராக்ஷஸஹு வைகாசிமீ } பகுதி 1

## தற்கால நிலைமை.

சென்ற மாசத்தில் ஸ்ரீமான் கந்தி என்பவரும் அவருடைய பத்நியவர்களும் சென்னையில் விஜயம் செய்து பல ஜனசமூகங்களில் கொண்டாடப்பட்டனர். அவர்கள் தென் ஆபிரிகாவில் இந்த தேசத்திலிருந்து அங்கே சென்று வஸிக்கும் இந்தியர்களை அசௌகரியப் படுத்திவந்த ஐரோப்பிய ஜாதியைச் சேர்ந்தோரின் ஜாதி வித்யாஸத்தை ஆதாரமாகக் கொண்ட அநீதமான சட்ட விதிகளை நிறுத்தி இந்தியர்களின் பேரில் அவர்களுக்குள்ள அநுதாபத்தினால் அவ்விந்தியர்களின் நிலைமையை அபிவிருத்திசெய்யக் கருதி அவர்களுக்குத் தலைவராய் நின்று அவர்களுடைய நன்மையைப் பாதுகாப்பதற்காக ஜெயிலுக்கு பலதரம் சென்றிருக்கின்றனர். அவர்களுடைய முயற்சியினால் அந்த தேசத்தில் இந்தியர்களின் நிலைமை அபிவிருத்தியடைந்தது. அவர்கள் இம்முடிவை அடைகிறதற்குச் செய்த முயற்சியானது பலாத்காரத்தை ஆதாரமாகக் கொண்டதல்ல. கலகம் செய்து கஷ்ட நிஷ்டூரத்தை நிவிர்த்திக்கும் மார்க்கத்தை அவர்கள் அநுஸ

ரிக்கவில்லை. மனோ பலமும் கஷ்ட நிஷ்டூரங்களை பொறு மையுடனும் தைரியத்தோடும் பொறுக்கும் தன்மையும் ஸ்ரீமான் கந்தியவர்களாலும் அவரைப் பின்பற்றியவர்களா லும் தென் ஆபிரிக்காவில் Passive Resistance என்ற முறை யை அவர்கள் தழுவினதின் மூலமாய்க் காண்பிக்கப்பட்டன. தென் ஆபிரிக்காவில் இந்தியர்களுக்குக் கஷ்டத்தைக் கொ டுக்கத்தக்க கொடுமையான சட்டங்களையும் விதிகளையும் அப்பிரதேசங்களின் ராஜரீகத்தை வகித்த குடியேறின ஐரோப்பியஜாதியார் ஏற்படுத்தியபோது ஸ்ரீமான் கந்தியும் அவரைச் சேர்ந்த இந்தியர்களும் அவ்வித சட்டங்களையும் விதிகளையும் மாற்றுவதற்கு முயன்ற விதம் என்னவென்றால் அவ்விதம் சட்டங்களையும் விதிகளையும் அவர்கள் கீழ்ப்படி யாது திரஸ்கரிப்பதின் மூலமாய் அவர்கள் நியாயஸ்தலங்க ளில் குற்றம் சாட்டப்பட்டார்கள். அக்குற்றங்களுக்குரிய தண்டனையை அடைந்து சிறைச்சாலைகளில் அடைக்கப்பட் டனர். அத்தண்டனைக்காலம் நீங்கி ஜெயில்களினின்று விடு விக்கப்பட்ட பிறகு மறுபடியும் அச்சட்டங்களையும் விதிக ளையும் தவிர்த்து அக்குற்றங்களுக்காக மறுபடியும்தண்டனை விதிக்கப்பட்டு சிறைச்சாலைக்குச் சென்றார்கள்.

***

இவ்விதம் பலதரம் புருஷர்களும் ஸ்திரீகளும் காராகி ருஹம் புகுவதால் அநீதமாயுள்ள சட்டங்களும் விதிகளும் பகிரங்கமடைந்து உலகமுழுதும் பிரக்யாதியை அடைந் தன.

***

பிறருக்குத் துன்பத்தை உண்டு பண்ணாமல் ஒருவன் தானாகவே ஒரு சட்டம் அல்லது விதியின் அநீதத்தை எடு த்துக் காட்டும் பொருட்டு கஷ்டத்தை அநுபவிப்பதை ஒரு வரும் தடை செய்யக் கூடாதன்றோ? இதுதான் பாஸிவ் ரேஸிஸ்டேன்ஸ் அல்லது வணங்கி எதிர்த்தலாகும். இதற்கு

ஆதாரம் சரீரபலத்தைக் காட்டிலும் ஆத்மபலம் வெற்றியடையத்தக்கதென்ற கொள்கையாம். ஸ்ரீமான் கந்தியவர்களின் முக்கியமான குணாதிசயம் என்னவென்றால் சாதாரணமாய் கூலிவேலை செய்யும் இந்திய புருஷர்களையும் ஸ்திரீகளையும் இவ்விதங்களான கஷ்டங்களை வகித்துக்கொண்டு ஜெயில்களுக்குச் செல்லவும் மற்ற துன்பங்களைப் பொறுக்கவும் தகுதியான மனோபாவத்தையுடையவர்களாயும் தைரியத்தோடும் உற்சாகத்தோடும் கூடினவர்களாயும் செய்பத் தக்க சாமர்த்தியமாம். அவ்விதமாக ஸ்ரீமான் கந்தியவர்களை விடாமுயற்சியுடனும் உற்சாகத்துடனும் பின்பற்றி அவர் போல் பாஸிவ் ரெஸிஸ்டர்ஸ் என்று கூறப்பட்டு வணங்கிஎதிர்த்தவர்களில் அநேகர் இந்தத் தமிழ் ஜில்லாக்களிலிருந்து சென்றவர்கள்.

***

அவர்களில் சிலர் தஞ்சாவூர் ஜில்லா தரங்கம்பாடி முதலிய பிரதேசங்களில் இருக்கிறபடியால் அவர்களைப் பார்க்க ஸ்ரீமான் கந்தியவர்களும் அவருடைய பத்னியும் தரங்கம்பாடி சென்று அவர்களால் உபசரிக்கப் பெற்றனர்.

***

ஒவ்வொரு மதமும் அம்மதத்தைத் தழுவும் ஜன ஸமூஹங்களும் உலகத்தின் அபிவிருத்திக்கு ஆதாரமாகவிருக்கிற ஞானம், பக்தி, கருமம்என்று மூன்றுவிதமாக அமைக்கப்பட்டிருக்கிற சகல பிரவிர்த்திகளுக்கும், அப்பிரவிர்த்திகள் பலவிதங்களாகக் கலந்து உலகத்தில் வெளித் தோன்றுகின்ற உலக நாகரிகத்திற்கும் சிற்சில முக்கியமான அம்சங்களைக் கொடுக்கின்றன. ஸநாதந தர்மம் என்ற ஆரியமதமானது உலகவிகாஸமுறையின் அமைப்பை விவரமாக வெளிக்காட்டி, அதில் ஒவ்வொரு ஜீவனின் தருமத்தையும் விகாசமுறையில் அவன் மேற்செல்லும் வழியையும் காட்டி எல்லா ஜீவகோடிகளும் ஈசுவரனது அம்ச

மென்றும் ஈசுவரன் எல்லா உலகங்களையும் வியாபித்து நிற்கின்றாரென்றும் கூறுகின்றது. இதுபோல மற்ற மதங்களும், அவைகளைச் சார்ந்த நாகரிகங்களும் பிரபஞ்சத்தின் கண்ணுள்ள வெவ்வேறு தத்துவங்களை போதிக்கின்றன. இவ்வுலகத்தில் விகாஸமுறையின் தத்துவங்கள் பலவிதங்களாக ஏற்பட்டிருப்பதாலும் அவைகள் பலவழிகளாக அறியத் தக்கனவாகையாலும் ஒருவர்போல் மற்றொருவர் அத்தத்துவங்களை அறியமாட்டார். ஒரு மதத்தைப்போல மற்றொரு மதம் அத்தத்துவங்களை எடுத்துரைக்கமாட்டாது. ஒரு ஜாதியாரால் சில தத்துவங்கள் அநுஸரிக்கப்பட்டு, வேறு ஒரு ஜாதியாரால் வேறு சில தத்துவங்கள் அனுஸரிக்கப்பட்டும் ஆகையால் ஒருவன் விகாஸ முறையில் மேற்செல்லுவோனாகில் அதைச் சார்ந்த எல்லா தத்துவங்களையும் அறிந்து அவைகளில் ஒவ்வொன்றுக்குமுள்ள சம்பந்தத்தை தெரிந்துகொண்டு அவைகள் தன் மதத்தில் விவரிக்கப்பட்டாலும் அல்லது தான்ஜன்மமெடுத்த ஜாதியாருக்குள் விசேஷமாக ஏற்பட்டாலும் அல்லது பிறர் மதம் அல்லது பிற ஜாதியாரால் அவலம்பிக்கப்பட்டாலும் அவ்வித்தியாசங்களைப் பாராட்டாமல் அத்தத்துவங்களுக்குள் நேர்ந்திருக்கும் சார்பையும் அவைகள் மநோவாக்குக் காயங்கள் மூலமாய் ஒழுக்கத்திற்கு உபயோகமுள்ளனவென்பதையும் அறிவதே உண்மையான விவேகமாகும். பொதுவாகக் கூறாமல் உதாரணங்கள் மூலமாய் விவரிக்கப்புகின், கிறிஸ்தவமதமானது ஒவ்வொரு ஜீவனின் மகிமையையும், 'அது உஜ்ஜீவிக்கத் தக்க ஸ்வாதந்தர்யத்தையுடையது' என்றதத்துவத்தையும் வற்புறுத்திச் சொல்லுகின்றது. இத்தத்துவத்தை ஆங்கில பாஷையில் 'மனிதனுக்குரிய ஸ்வதந்தரங்கள்' என்றுகூறுகிறார்கள். இந்துமதமோ இதுவிஷயமாக பொதுவாக ஸமஷ்டியில் எல்லாஜீவர்களும் ஈசுவரனுடைய அம்சமென்று கூறுகின்றது.

* * *

கிறிஸ்துவ மதத்தில் மேற்கூறிய தத்துவத்தின் பிரயோகத்தை அம்மதத்தைக் கைக்கொள்பவரின் பிரவர்த்தி

களின் மூலமாய் நாம் நன்றாகப் பார்க்கலாம். ஜீவன் மானிடவர்க்கத்தில் எவ்வித அற்ப நிலையை அடைந்திருந்தாலும், அவன் தனக்குரிய ஸ்வதந்திரங்களை யடையுமாறு, அவனைக் கைதூக்கி விடவேண்டியது பிறர் கடமையென்றும், அதற்குரியமுயற்சிகளை பிறர்எடுத்துக்கொள்ளவேண்டுவது முக்கியமென்றும் அம்மதத்தைககைக்கொள்ளுகிறவர்கள் கருதுகிறார்கள். பாபம் செய்கின்றவர்களை அவர்கள் தள்ளிவிடுகிறதில்லை. கிறிஸ்துவ மதம் பரவும் பிரதேசங்களில் அவர்கள் தத்துவ சாஸ்திரங்களைக் கற்கிறதிலாவது அவைகளை போதிப்பதிலாவது விசேஷமாய் முயற்சிக்கிறதில்லை. கிறிஸ்துவமதத்தில் இந்துமதம்போல் தத்துவசாஸ்திர ஆராய்ச்சி அதிகமாய்க் கிடையாது. ஆனால் கிறிஸ்துவ மதம் பரவும் இடங்களில் லௌகிக வித்தைகளைக் கற்பிக்கும் பள்ளிக்கூடங்களும் வியாதிகளுக்கு சிகித்ஸை செய்யக்கூடிய ஔஷதாலயங்களும் ரணவைத்தியஸ்தானங்களும் செவிடு குருடு முதலிய அவயவக் குறையடைந்தவர்கள் படிக்கத்தக்க வித்யாசாலைகளும் பலகுற்றங்களுக்காக ராஜதண்டனையடைந்தவர்கள் சிறைச் சாலையிலிருக்கும் காலத்திலும் அவர்களை நல்வழிப் படுத்தும் போதனைகளும் அவர்கள் அச்சிறைச்சாலைகளிலிருந்து வெளிப்படும் காலத்தில் அவர்களை துர்வழிகளிலிருந்து மீட்டக்கூடிய ஏற்பாடுகளும் களவு கொள்ளை முதலிய தீச்செயல்களையே ஜாதித் தொழில்களாகக் கைக்கொண்ட ஜாதியர்களை நல்வழியிற் கொண்டுவர இரக்ஷண்ணிய சேனை என்ற ஸால்வேஷன் ஆர்மி யார்களால் ஏற்படுத்தப்பட்ட வஸதியான இடங்களும் (Criminal Settlements) மிக எளியவனும் யாசிக்காமல் கௌரவமாய்க் காலக்ஷேபம் செய்ய பழக்கிக் கொடுக்கும் கைத்தொழிற் சாலைகளும், பெற்றோர்களால் விவாக ஸம்ஸ்காரமில்லாமலும் அல்லது தாரித்திரியத்தினாலும் அல்லது குரூர மனதினாலும் அகற்றப்பட்ட குழந்தைகளை எடுத்து வளர்க்க அநாதாலயங்களும், சம்சாரத்தினின்று நழுவி விலக்கப்பட்ட ஸ்திரீகளைக் கடைத்

தேற்றசரண்யஸ்தானங்களும் Refuges for Fallen Women ஏற்படுவது சாதாரணமாய்ப் பார்க்கக்கூடியதாயிருக்கிறது. ஒவ்வொரு ஜீவனும் உலக விகாஸமுறையில் ஹீனஸ்திதியை அடைந்திருந்த போதிலும் அவன் கௌரவமானவன். அவன் அரிய பெருமைக்குரியவன். அவனை உத்தாரணம் செய்யவேண்டியது அவனைக்காட்டிலும் உயர்ந்த ஸ்திதியில் உள்ளவர்களின் கடமை என்ற தத்துவத்தைத் தெரிந்துகொண்டதின் பயனாகும். மேற்சொல்லிய ஹீன ஸ்திதியை அடைந்த பலர்கள் இந்துமதத்திலோ ஜாதியிலிருந்து விலக்கப்பெற்று அவர்கள் குற்றமற்றவழிகளை அடையாவண்ணமும் இன்னும் அதோகதிகளை அடையுமாறும் தள்ளப்படுகிறார்கள். ஆனால் ஆரியமதத்தில் கல் மண் புல் பூண்டு மிருகம் மனிதன் முதலிய எல்லா ஜீவராசிகளும் ஈசுவரனுடைய அம்சமென்று கூறுகின்ற நியாயத்தால் ஜீவகாருண்யம் மனிதவர்க்கத்திற்குமட்டும் காட்டப்படாமல் எல்லாப்பிராணி வர்க்கங்களுக்கும் காட்டப்படுகிறது. அஹிம்ஸையானது பரமதர்மமென்று கொண்டாடப்படுகின்றது. இந்துக்களில் புலால் உண்பவர்களும் விரதகாலங்களிலும் பிதுர்ப்பூசனைகாலங்களிலும், வயதுசென்று இப்புவியை விட்டுநீங்கும் காலம் நெருங்கும்பொழுதும் அவ்வுணவை மறுக்கவேண்டுமென்று நினைப்பதே, அத்தர்மம் உத்தமமானதென்று கைக்கொள்ளப் படுவதற்கு ஒரு சாக்ஷியமாகும். மேற்றிசை யோன்கு திசைநாய்முதலியமிருகங்களைப்பரிபாலிப்பதற்குமுக்கிய காரணம் யாதெனில் அவைகள் நன்றாக வளர்க்கப்பட்டால் அதினால் தனக்கு ஏற்படும் லாபத்தைக் கருதுவதால்தான். ஜீவகாருண்யம் என்பது அவன் மனதில் முக்கிய காரணமாக ஏற்படுகிறதில்லை. அது கீழ்ப்படியான ஸ்தானத்தை யுடையது என்றே கருதுகிறான்.

* * *

இவ்விதமாகவே பாரஸீக மதத்தைச் சார்ந்தவர்கள் "சுத்தம்" என்ற த த் து வ த் தை முக்கியமாய்க் கைக்

கொண்டிருக்கிறார்கள். பிருதிவீ, ஜலம், காற்று முதலியவைகளைச்சுத்தமாய் வைப்பதும், மனோவாக்குக்காயங்களை சுத்தமாய் வைப்பதும், அத்தத்துவத்தை அறிந்து அப்பியஸிப்பதால் ஏற்படும் பயனாகும். இதின் மூலமாய் பல பிரயோஜனங்கள் ஏற்படுகின்றன. நதிகளிலும் தடாகங்களிலும் மற்ற நீர்நிலைகளிலும் இருக்கும் ஜலத்தைச்சுத்தமாய் வைப்பதும் பட்டணங்களிலும் கிராமங்களிலும் வீடுகளிலும் அசுத்தமான வஸ்துக்கள் இல்லாமற்செய்வதும் இத்தத்துவத்தின் காரியமாகும். சரீரத்தை ஸ்நானத்தினாலும் உட்கொள்ளும் ஸாத்விக ஆகாரம் பானம் முதலியவைகளாலும் தரிக்கும் உடைகளாலும் சுத்தமாய் வைத்திருத்தலும் அதைச் சார்ந்ததேயாகும். வாக்கை வாய்மையால் சுத்தம் செய்தலும், மனத்தை பகவத்கீதை 16-வது அத்யாயத்தில் கூறப்பட்டிருக்கிற தெய்வீக ஸம்பத்துக்களாகிய பயமின்மை முதலிய தன்மைகளால் சுத்திசெய்வதும், சௌசம் என்ற தத்துவத்தின் கண்ணாக ஏற்படுகின்றன.

***

இவ்வாறு ஈசுவரனது விபூதிகள் பல மதங்களிலும் பல ஜாதியார்களிடத்தும் பல நாகரிகங்களிலும் பலவிதங்களில் பிரகாசிக்கின்றன. அவைகள் மஹத்தானபடியால் ஒரே மதத்திலும் ஒரே நாகரிகத்திலும் அமைக்கக் கூடியதல்ல.

அ. ரங்கஸ்வாமி ஐயர், B. A., B. L., F. T. S

---

## ஸூக்ஷ்ம சரீரிகளான மஹோபகாரிகள்.

### உலக முழுமையிலும் அவர்களைப் பற்றிய நம்பிக்கை.*

தற்காலத்தில் பற்பல மதஸ்தர்கள், உயிர் நீங்கிய உடலைத் தழுவுவார் போல, உட்கருத்தையறியாது அநுஷ்டித்து வரும் அநேக கொள்கைகளைத் தத்துவார்த்தத்துடன் விளக்கி, உயிர்ப்பிப்பது பிரஹ்மக்ஞான தர்சநத்தின் பிரதான அம்சமாகும். மேற்கூறிய விதமான மூட பக்தியை உதறி, மநோ, வாக்கு, காயங்களின் சுத்தியையே எப்போதுங் கருத்திற்கொண்டு, யுக்தி புத்தியுடன் தம்முடைய நித்திய சரியையைச் சீர்ப்படுத்திவரும் மேன்மார்க்கத்தைக் கைக்கொண்ட தீரர்கள் கூடச் சிற்சில சந்தர்ப்பங்களில், தம்முடைய நெடுநாள் வழக்கங்கள் அகன்றமையால், ஏதோ தம்வாழ்க்கைக்கொருகுறையேற்பட்டதாகஎண்ணுகிறார்கள்.

ஆயினும், பூர்வ ஜன்ம கர்ம வசத்தால், இவர்கள் பிரஹ்மக்ஞான தர்சநத்தை அவலம்பிக்கும் பாக்கியத்தைப் பெற்றிருந்தால், இம்மார்க்கத்தைக் கைப்பற்றியதில் தம் வாழ்க்கைக்கொரு குறையும் ஏற்படவில்லையென்றும், ஆனால் முன்னினும் பன்மடங்கு பெருமை வாய்ந்ததென்றும் நன்கறிவார்கள். இவர்கள் கனவு கண்டு விழித்தவர்களைப் போல், தாம் பக்தியுடன் அநுஷ்டித்து வந்த நம்பிக்கைகளைப் பற்றித் தெளிவாய் வியவஹரிக்க இயலாதவர்களாயிராமல், பௌதிக சாஸ்திரிகள் பிரகிருதி தர்மங்களைப் பரீக்ஷித்தறிவதுபோல, ஆராய்ச்சி செய்து உட்கருத்தை வெளிப்படுத்த சக்தர்களாவர். பிரஹ்மக்ஞான தர்சநத்திற் பயிலப்பயில முன் விளங்காமலிருந்த கொள்கைகளின் உட்கருத்துக்களெல்லாம் நாளுக்குநாள் அதிகபிரகாசத்துடன் ஸ்புரிக்கும்.

பிரஹ்மக்ஞான தர்சநத்தால் விளைந்த ஓர் குறித்த நற்பயனென்னவெனின், நாஸ்திகம் பாவிய தற்கால நாகரிகம்

* இது ஸ்ரீமான் லெட்பீடரவர்களுடைய இன்விஸிபில் ஹெல்பர்ஸ் என்னும் புத்தகத்தினின்றும் எடுத்தெழுதப்பட்டது.

க்ஷப்படுவதற்கு முன்னர் பிரசாரமாயிருந்தும், இப்போது மங்கியுமிருக்கிற ஒரு பாரமார்த்திக உண்மையைத் திரும்ப நம்மவர்க்கு உத்போதம் செய்வதே. அவ்வுண்மையானது, ஸ்தூல உலகத்தின்நன்மைக்கு ஆதாரபூதமாயுள்ள ஸூக்ஷ்மலோகத்தைப் பற்றியதாகும். நமது ஸ்தூலப் பார்வைக்குப் புலனுகாமல் பிருதிவி, அப்பு, தேஜசு, வாயு, ஆகாசம் என்னும் பஞ்சபூதங்களிலும் சஞ்சரிக்கும் ஜீவவர்க்கங்களென்ன—வநங்களிலும்மலைகளிலும் பாதாளமான சுரங்கங்களிலும் வஸிக்கும் தேவகணங்களென்ன—இவைகளைப் பற்றிய நம்பிக்கையும், நாம் கேள்வியுற்றிருக்கும் அதையொட்டிய கதைகளும் மௌட்டியத்தாலான பொய்யென்று நாம் கொள்ளத்தகாதென்றும், ஆனல் அவைகள் வாஸ்தவமும் சாஸ்திரீயமுமான "உண்மைகளை ஆதாரமாக உடையனவென்றும் பிரஹ்மக்ஞாந தரிசனம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்குகின்றது. மரணத்திற்குப் பின் ஜீவனின் கதியைப் பற்றி நியாயத்திற்கும் சாஸ்திரத்திற்கும் ஒவ்வாத விபரீத அபிப்பிராயங்களையுடைய மேனுட்டாருக்கு, இறந்த பிறகு ஜீவனுடைய லோகாந்தர வாழ்க்கையைப் பற்றித்தெளிவிப்பதன் மூலயாய் விசேஷமான பிரயோஜனத்தைக் கொடுக்கின்றது. நமக்குங்கூட இப்போது மேற்சொன்ன விஷயத்தைப் பற்றி நுண்ணறிவே யில்லாமற் போயிற்று. ஆகையால் மேனுட்டாரைப் போலவே நாமும், அவ்வளவு பிரயோஜநத்தை, பிரஹ்மக்ஞான தரிசநத்தாலடைகிறோம்.

ஜீவனுடைய (அழிவற்ற அல்லது) சாசுவதமான தன்மையையும், ஸ்தூல உடல் நீங்கிய பிறகு ஜீவனுடைய லோகாந்தர வாழ்க்கையையும் பற்றி வியவஹரிப்பதில் பிரஹ்மக்ஞான தரிசனம் ஒருவாறு, மற்றைய மதஸ்தர்கள் தற்கால நிலையில் வியவஹரிக்கும் முறையினின்று முற்றிலும் வேறுபடுகிறதெனக் கூறலாம். அதாவது, பிரஹ்மக்ஞான தரிசநம் இவ்விஷயங்களெல்லாம் புராணத்திலுள்ளன, வே

தங்களிலுள்ளன, இன்னும் சிலாக்கியமான கிரந்தங்களிலுள்ளன. இவ்விஷயங்களெல்லாம் நமது முன்னோர்கள் கூறக்கேட்டிருக்கிறேன். தத்துவ சாஸ்திரமும் இவ்விஷயங்களைத் தான் நிர்ணயிக்கின்றது" என்று மாத்திரம் சொல்லிக்கொண்டிராமல்; அவைகளை நாம் பிரத்தியக்ஷமாயறியலாமென்றும், இந்த ஸ்தூல உலக வாஸிகளாகிய நாம் ஒவ்வொருவரும் எவ்வளவு ஸ்வாநுபவத்துடன் "காற்றை" உணருகிறோமோ, அவ்வளவு ஸாதாரணமாய் ஸூக்ஷ்ம உலகங்களில் தொழிற்பட்டு முயன்று வருகின்ற அநேகர் பிரஹ்மக்ஞான ஸங்கத்தில் இப்போதும் உளர்என்றும் வியக்தமாய்க் கூறுகின்றது.

இன்னும் பிரபஞ்ச நியதியில் ஸ்வாபாவிகமாகவே ஏற்பட்டுள்ள, ஸூக்ஷ்மமாய்த் தொழிற்படும் மஹோபகாரிகளான ஜீவகணங்களைப் பற்றியும் பிரஹ்மக்ஞான தரிசநம் விரித்துரைக்கின்றது. தொன்று தொட்டு, இம்மஹோபகாரிகளைப்பற்றிய நம்பிக்கை உலக முழுமையும் இருந்திருப்பதாகவே தெரியவருகிறது. இப்போதும்கூட கிறீஸ்தவ் மதத்தின் "பிராட்டெஸ்டண்ட்" என்ற வகுப்பினரைத் தவிர மற்றெல்லா மதங்களிலும் இவ்வுண்மை பூர்ணப் பிரகாசத்துடன் விளங்காமற்போனாலும், கொஞ்ச நஞ்சமாவது உள்ளது. பிராட்டெஸ்டண்ட் வகுப்பினர் தம்முடைய மதத்தை ஏற்பாடு செய்துகொண்டதில் செய்த தவறு ஒன்றுண்டு, அஃதாவது பரிபக்குவ நிலையில் மநுஷ்யனுக்கு மேற்பட்டவும், ஈசுவரனுக்குத் தாழ்ந்தவுமான பல ஜீவ வர்க்கங்கள் பல தாரதம்மியங்களுடன் உள்ளன என்னும் ஸோபாந முறையைத் திரஸ்கரித்து விட்டு, மநுஷ்யனுடன் கடவுள் நேரான ஸம்பந்தத்தை வைத்துக்கொண்டிருக்கிறார் என்று மட்டும் கருதினர். இராஜாங்க முறையை ஆராய்ந்து பார்ப்போமானால் பிரஜைகளுடன் அரசன் நேரான ஸம்பந்தம் வைத்துக்கொண்டு ஆளுகின்றானில்லை. அரசனுக்குக்

கீழாக அநேக உத்யோகஸ்தர்கள் அநேக இலாகாக்களுக்கு அதிபர்களாயிருந்து அரசனுடன்ஒத்து உழைப்பதுஇவ்வுலகத்திய இராஜாங்க முறையின் நேர்மைக்குஅத்தியாவசியகமாயின், இதனினும் பன்மடங்குபெரியதும், "நேர்மையே" (harmony) உருவெடுத்ததுமான பிரபஞ்ச நியதிக்கு, ஈசுவரனுக்குத் துணைவர்களான மஹோபகாரிகள் எண்ணிறந்தவர்கள் மனுஷ்யனுக்கு மேம்பட்ட நிலையில் இருந்தே தீரவேண்டுமென்பதற்கு ஆக்ஷேபணை யென்ன? ஆகையால் "பிராடெஸ்டண்ட்" வகுப்பினர் ஈசுவரனுடைய பெருமையைச் சரியாய் அறிந்துகொண்டார்களிலர். மநுஷ்யர்கள், ஈசுவர ஸஹாயம் தமக்கு எவ்வாய்க்கால் வழியாக வருமோ, அதை நாடாமற் போனமையால் உதவி பெறாமலிருக்கின்றனர்.

பிரஹ்மாண்ட நாயகனாகிய ஜகதீசுவரன், நேராகவே மநுஷ்யர்களிடத்து ஸம்பந்தம் வைத்துக்கொண்டும், பிரதி மநுஷ்யனையும் தம் கருத்திற் கொண்டும், அவனவனுடைய க்ஷேம லாபங்களையும் கவனித்து வருகிறார் என்னும் கொள்கையைச் சற்று ஆலோசிக்குமிடத்து, அதன் குறைகளும் அஸம்பாவிதங்களும் நமக்கு நன்றாய் விளங்கும். அதாவது ஜகத்தைப் பரிபாலனம் செய்வதில் "ஈசுவரன்" பார பக்ஷமுள்ளவரென்று நாம் கொள்ளவேண்டி வரும். ஒருவன் தன் பூர்வ கர்மங்களுக்குத் தக்கபடியே இப்போது உதவிபெறுகிறான் என்றும், அவ்வுதவியையும்நேராக ஈசுவரனிடமிருந்தே யல்லாமல், ஈசுவரனைப் போலவேயுள்ளவர்களாகிய மகான்களின் மூலமாகவே பெறுகிறான் என்றும் பிரஹ்மக்ஞான தரிசனம் கூறுவதானது, மேற்கூறிய அஸம்பாவிதங்களுக்கு இடந்தராது. தவிரவும், ஈசுவரன் முதல் நம்முடைய பாத தூளிவரை ஸோபான முறையாக பலபடித்தரமான பக்குவிகளாகிய ஜீவர்கள் உளர் என்னும்

ஸநாதனமான ஞானத்தைத் திரும்ப நம்மவர்க்கு பிரஹ்மக் ஞான, தரிசனம் வற்புறுத்துகின்றது.

ஸூக்ஷ்ம லோகத்தினின்று மேற்கூறியவாறு உபகரிக்குமவர்களைப்பற்றிக் கீழ் நாடுகளில் எப்போதும் நம்பிக்கை உள்ளது. மற்றைய தேசங்களிலும் இதே நம்பிக்கையிருந்தபோதிலும், பற்பல பாஷைகளில் பற்பல பெயர்களால் அவ்வுபகாரிகள் அழைக்கப்படுகின்றனர். ஐரோப்பாக்கண்டத்திலும், "கிரீஸ்" தேசத்துக் கதைகளில் தேவர்கள், அடிக்கடி மநுஷ்யர்களுடைய பிரவிர்த்திகளிலும் உபகரிப்பதாகப் பிரஸ்தாபம் உள்ளது. "ரோமர்"களுடைய கதையிலும் "காஸ்டர்" "பொல்லக்ஸ்" என்ற இருவர்களாகிய உபகாரிகள் 'லேக்ரிஜில்லஸ்' என்னும் யுத்தத்தில், "ரோமர்கள்" ஒரு அற்பமானகுடியரசா (Repuplic) யிருந்தபோது அவர்கள் ஸைந்யங்களை நடத்தினரென்றும் பிரஸ்தாபம் உள்ளது. மேல்நாட்டுச் சரித்திரத்தின் ஆதிகாலமாகிய புராணகாலத்தில் தான் இவ்வித நம்பிக்கை இருந்தது. பின்பு மறைந்ததென்று இல்லாமல், மத்ய காலத்துக் கிறிஸ்தவ பக்தர்களின் சரித்திரங்களிலும் அவர்களைப் புறச் சமயத்தார்களின் ஹிம்ஸையினின்றும் தப்புவித்த தேவதூதர்களைப் பற்றிப் பிரஸ்தாபம் உள்ளது. இவ்வுபகாரிகள் கிறிஸ்தவ சமயிகளான "பக்தர்கள்" அநேகரை அவர்கட்குபாயம் உண்டாகாமல், அவர்கள் அறியாமையால் நாடும் வழியைவிட்டு, வேறு மார்க்கத்தைப் பற்றும் படியாகத் தூண்டி வழிநடத்தியுமிருப்பதாக ஸூசனைகள் அக்கதைகளில் உள்ளன.

ஆத்மாராம்.

—

## "ஜகத்குரு வரும் வரை"

### நாம் செய்யவேண்டிய தென்ன?

---

ஜகத்குரு எப்பொழுது வரப்போகிறார் என்று நாம் எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். நாம் சேர்ந்திருக்கிற உதயதிசை நக்ஷத்ர சங்கத்தின் முக்கிய வேலை என்னவென்றால், அவர் வந்தவுடன் உலகம் அவரை அங்கீகரிப்பதற்குற்ற ஏற்பாடுகள் செய்வதே. அவர் வரும் வழியை நன்றாகச் சுத்தப்படுத்த வேண்டியது நமது முக்கிய கடமை. ஜனங்களுக்கு அவர் வரவை அடிக்கடி நாம் தெரிவிப்பதுமன்றி நாம் அவர் வருவாரென்று எப்படி பூர்ணமாய் நம்புகிறோமோ, அப்படியே இதரர்களையும் நம்பும்படி செய்யவேண்டுவது இச்சங்கத்திலுள்ள ஒவ்வொரு மெம்பரின் பிரதான வேலையாகும். நாம் எவ்வளவுக்கெவ்வளவு அவர் வரவை எதிர் பார்த்துக்கொண்டு, அவரின்மேல் அளவிலா நேசம் செலுத்துகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு அவரும் நம்மை அதைவிடப் பன்மடங்கு நேசத்தோடும் அன்போடும் கருதுவார் என்பது திண்ணம். ஜகத்குருவானவர் தோன்றினால் "இவர் லோககுரு தானென்று நாமறிந்துகொள்வது எங்ஙனம்?" என்ற ஆவல் நமக்கு இருந்தால் அவரைத் தெரிந்து கொள்வதற்கு எவ்வழிகள் உண்டோ அவைகளையெல்லாம் அடையநாம் முயற்சிக்க வேண்டுமல்லவா? நாம் எப்படித தெரிந்துகொள்வது? அவர் எப்படி உலகத்தில் நடந்துகொள்வாரோ அப்படி நாமும் நடக்க வேண்டியது அவசியம். பரமபுருஷன் ஒருவர் வரப்போகிறார் என்று நாம் நம்புகிறோமாகையால், அவரைப்போலவே நாமும் நடக்கவேண்டியது அவசியம். அவரிடத்தில் என்னகுணங்கள் விசேஷித்து நிறைந்திருக்கின்றனவோ அக்குணாதிசயங்கள் நம்மிடத்திலும் அணுவளவாவது இருக்கும்படி நாம் தினசரி நடபடிக்கைகளில் நடந்துகொண்டு வருவோமேயா

ஞல், அவர்வரும்பொழுது, அவர்நம்மைச் சீக்கிரம் அறிந்து கொள்வதும், நாமும் அவரைத் தாமஸமின்றி லோககுரு தான் இவர் என்று எளிதில் நிர்ணயித்தலும் இலகுவாயிருக்கும். வருகிற ஜகத்குரு மைத்ரேய மஹரிஷியாயிருந்தாலும் அல்லது யாராயிருந்தாலும்சரி. அவருடைய குணாதிசயங்கள், கொஞ்சமேனும் நம்மிடத்திலும் அமைந்திருந்தால்தான் நாம் அவரை எளிதில் தெரிந்துகொண்டு அவரைச் சந்தோஷப்படுத்தி அவருக்கேற்றபடி நடந்துகொள்ளலாம்.

இன்னும் சிலவருஷங்களுக்கு நமக்கு இந்த வேலையே ஒழிய வேறில்லை. ஜகத்குருவின் பூர்ணசாயையுள்ள பிரதிபிம்பங்களாயிருப்பது சிரமமாயினும், அதிசயமான சம்பூர்ண குணங்களோடு கூடிய ஜகத்குருவின் முன் மாதிரியை வைத்தே நடக்க கூடியவரையில் நாம் எவ்விதத்திலும் முயலவேண்டும். நம்மைவிடக் கீழ்ஜாதியார்களிடத்தும் பலஹீனமுள்ள ஜந்துக்களிடத்தும் விசேஷஅன்பு பாராட்டவேண்டும். கல்வியறிவு இல்லாதவர்களையும், திக்கற்ற அநாதிகளையும் விசேஷஅநுதாபத்துடன் கவனிக்க வேண்டும். பரமகுருவின் அளவிலா அன்பையும், எங்கும் நிறைகின்ற கருணைக்கடலாகிய அப்பரமருடைய இன்னும் பல மேலான குணாதிசயங்களையும் உலகத்தில் வெளிப்படக் காண்பிப்பதினால் அவரைப்போலவே நமக்கும் அபாரமான அன்பின்சக்தியானது பெருகுமன்றோ? அவர் அன்பிற்கும் கருணைக்கும் அளவு சங்கியையே இல்லை. உலக முழுமைக்குமே தம் கருணைவெள்ளமானது பூர்ணமாய்ப்பிரவகித்துக் தம்மினும் மெலியராகிய அகில ஜீவகோடிகளையும் உஜ்ஜீவிக்கச் செய்யும் மாண்புடைய அன்பிற் பூரணமான அந்தக்கரணத்தோடு அம்மஹான் விளங்குகின்றனரன்றோ! அவரது அன்பில் எள்ளளவாகிலும் நம்மிடத்திலிருந்தால் அவர் வரும்பொழுது சீக்கிரம் அவரைத் தெரிந்து கொள்ளலாமல்லவா? நாம் அப்படி அவரை எதிர் பார்த்துக்கொண்டு அவர்போல நடப்பது

ந்து அடிக்கடி விடாமுயற்சி செய்யவேண்டும். அவருடைய ஞானத்தில் கொஞ்சமாகிலும் நமக்கு இருக்குமேயானால், அவரது பெருமையான குணங்களைக் கண்டு, அவர் போகும் வழியே நாமும் செல்வதற்கு அதுவொரு அஸாதகமாயிருக்கும். மஹா புருஷர்களிடத்தில் பூரணமாயிருக்கிற குணநிசயங்களை நம்மிடத்தில் அமையப்பெறுமாறு முயலவேண்டியது அவசியமென்று அறியுங்கள். மூர்க்கத் தனமாகவாவது அல்லது கோபமாகவாவது பேசாமல், பிறரிடத்தில் வெகு சாந்தமாய் நடந்துகொள்ள நாம் எவ்விதத்திலும் பிரையாசைப்படவேண்டும். அப்படி மூர்க்கமாகவோ அல்லது கோபமாகவோ பேசினால் என்ன என்று அலக்ஷ்யமாய் இருந்துவிடக்கூடாது. எப்படி இக்கெட்டகுணங்கள் கொஞ்சமேனும் நம்மிடமிருந்தால். அவைகள் நாம் செல்லுகிற வழியைத் தடுக்குமோ, அப்படியே இவைகள் நம்மிடமில்லாமற் போனால், நாம் நடக்க முயல்கிற வழிக்கு மிக்க ஸாதகமாயிருக்குமல்லவா? நம்முடைய தினஸரி நடபடிக்கைகளில் நேரும் இத்தகைய அற்பக் குற்றங்கள்தான் நம் அபிவிருத்தியை மிகக் குறைத்துவிடுகின்றன. ஜலமுள்ள ஒரு பாத்திரத்தில் ஏதாவது ஒரு சிறுதுவாரம் இருந்தால், அத்துவாரத்தின் வழியாய்ச் சற்று நேரத்திற்குள் ஜலம் முழுவதும் கீழே போய்விடுவது போலவே, துர்க்குணங்களினால் நம்முடைய சீலமுழுவதும் கெட்டுப்போகு மல்லவா? கரையான்கள் எவ்வளவு சிறிய பிராணிகள்! அவைகளெல்லாம் ஒன்றுகூடி, ஒருகட்டை எவ்வளவு பெரிதாயிருந்தாலும் அதைப் பிரதிநிமிஷமும் கொஞ்சங்கொஞ்சமாக அரித்துக் கடைசியில் ஒன்றுமில்லாமல் செய்கிறதை எல்லோரும் பார்த்திருக்கிறோம். அச்சிறுஜந்துக்கள் சிறிது நேரத்தில் ஒன்றுகூடி ஒரு பெரிய புற்றையும் கட்டிவிடுகின்றன. அதுமாதிரியே நம் துர்க்குணங்களும் நற்குணங்களும் நம்மைத் தாழ்த்துவதற்கும் உயர்த்துவதற்கும் கூடும். ஆகையால் ஒவ்வொருமெம்பரும் அவரைப் போலவே நடக்க முயல்வதுமன்றி நம்

ஞானம், அன்பு, இரக்கம் முதலிய நற்குணங்கள் கெட்ட குணங்களால் ஒழிந்து போகாதபடிக்கும் காத்துக்கொண்டு வருவது மிக அவசியமாகும். பெரிய விஷயங்களில் நாம் அரிய குணங்களைக் கைக்கொண்டு, கொடிய தோஷங்களை (பாபச் செயல்களை) மந உறுதியுடன் விலக்கிவிடக் கூடிய தீரர்களாயிருப்பினும், அதைப் பார்க்கிலும் அற்ப கார்யங்களிலேயே நாம் அதிக கவனமாயிருத்தல் வேண்டும். ஏனெனில் ஸதாகாலமும் அற்ப கார்யங்களுடனேயே நாம் போராட வேண்டியவர்கள். மகத்தான கார்யங்களோ வெகு அபூர்வமாகத் தான் ஸம்பவிக்கும்.

ஆகையால் நீங்கள் கவனிக்கவேண்டிய விஷயமொன்றுண்டு. ஜகத்குருவின் அவதார காலத்திற்குள் நீங்கள் செய்யவேண்டிய யத்நங்களுள், அவர் வருங்காலத்தில் அவரை யறிந்துகொள்ளும் சக்தியுடையவர்களாவதும் ஒன்றெனக்கருதுவீர்களாயின், அவரிடம் விளங்கும் நற்குணங்களை உங்களுடைய சீலத்திலும் அமையப் பெறும் பொருட்டு, இப்போது முதற்கொண்டே நீங்கள் இடையறாத விடாமுயற்சியுடன் யத்னிக்கவேண்டும். அதனால் உங்கள் ஸ்வபாவத்தில் உள்ள அற்பக்குறைகளை வேரோடு களைதல் வேண்டும். ஏனெனில் நீங்கள் இதுவரைசேகரித்திருக்கும் அன்பும் ஞானமும் அற்பக் குறைகளாகிய துவாரங்களின் வழியாய் வீணாய் ஒழுகிப்போகின்றன. இந்நஷ்டத்தைக்கூட உணருகிறீர்களில்லை.

அதைர்யங் கொள்ளாதீர்கள். அதைர்யங் கொள்ளுதல், ரோம ராஜ்யத்தின் பூர்வீகர்கள் கருதிவந்தபடி, எல்லாக் குற்றங்களிலும் மிக இழிவானது. நமக்குள்ளிருக்கும் ஈசுவர சைதந்யம் எவ்வித இடையூறையும் விலக்கி, எவ்விதத் தவறுகளையும் மேற்கொண்டு நம்மை ஸந்மார்க்கத்தில் உன்னத பதவியை யடைவதற்காளாக்கி விடுகின்றது என்பதில் சந்தேகம் வேண்டாம்.

ஆகையால் உங்களிடத்திலேயே முதலில் தைர்யங்கொள்ளுங்கள். ஏனெனில் உங்கள் ஹிருதயத்தில் வஸிக்கின்ற ஆத்மா, பரமாத்மாவின் ஒரு பொறியாகும். அப்படிப்பட்ட ஆத்மா துன்பங்கள் எவ்வளவு வந்தாலும் அவ்வளவையும் ஜயிக்கத்தக்க வல்லமையுடையது. மஹான்களிடத்திலும் சலியாத பக்தியை நாம் கொள்ளவேண்டும். ஏனெனில் ஈசுவரத் தன்மை அவர்களிடம் நம்மைப் பார்க்கிலும் அதிகமாகப் பிரகாசிக்கின்றது. கடைசியாக "மநுஷ்யனால் ஸாதிக்கக்கூடாத கார்யமொன்றுமில்லை. மநுஷ்யனே ஈசுவராம்சம் பொருந்தியவன்" என்னும் பரம இரஹஸ்யத்திலும் உறுதியான நம்பிக்கை வேண்டும். ஏனெனில் நமக்குள் வஸிக்கும் ஈசுவர சைதந்யம் பரமேசுவரனது பாதாரவிந்தங்களுக்கே நம்மைச் சேர்ப்பிக்கின்றதன்றோ!

R. சேஷாசாரி.

---

## நன்மொழி.

பாராதி யண்டமெலாம் படர்கானற் சலம்போற்
பார்த்தனையே முடிவினின்று பாரெதுதா னின்ற
தாராலு மறியாத சத்தன்றோ அதுவாய்
அங்கிருநீ யெங்கிருந்தும் அதுவானவை கண்டாய்
பூராய மாகவுநீ மற்றொன்றை விரித்துப்
புலம்பாதே சஞ்சலமாப் புத்தியைநாட் டாதே
ஓராதே ஒன்றையுநீ முன்னிலைவை யாதே
உள்ளபடி முடியுமெலாம் உள்ளபடி காணே.

---

# ஸ்ரீ மருகுருதோத்திர சோடச கலாமாலை.

## எழுசீர் ஆசிரியவிருத்தம்.

---

மங்கள மிலங்கி யோங்கிடு மிமய
வரைமருங் கொளிருமோ ரமலத்
துங்கமார் வெள்ளி யம்பலப் பதியிற்
றொல்தவப் பயனெலாந் திரண்டு
சிங்கவா தனத்தி லமர்ந்துசின் முத்ரை
திகழ்ந்திடச் சீடர்சூழ்ந் தேற்றும்
புங்கவா வடியார் போற்றுமெய்ப் பொருளே
பூரண மருகுரு மணியே. (க)

பூரண பிரம சச்சிதா னந்தப்
பொருளதே போதக குருவாய்த்
தாரணி யுய்வான் வந்ததத் துவமே
சாற்றுமெற் குளமனு வதனைப்
பூரணப் பொருளா யேற்றுவந் தன்பு
பொருந்திநல் லபயமு நல்கிக்
காரண மென்கண் ணாய்ந்திடா தருளாய்
கருத்தனே மருகுரு மணியே. (உ)

கருத்தனே யகர்த்த வன்னிதா கருத்த
வாண்டவா கணக்கில்பல் பிறப்பில்
வருத்தமுற் றடியேன் மயங்குத லுனது
மாண்புறு மருட்பெருக் கினுக்குப்
பொருத்தமோ சொல்லாய் பொய்யனா மென்னைப்
பூரண ணாக்கினை யாயின்
அருத்தமா மன்னி தாகருத் துவமென்
றறையலா மருகுரு மணியே. (ங)

அன்னிய மில்லா வென்னையாட் கொள்ள
வளவிலா வருணிதி யிருந்தும்

## ஸ்ரீ மருகுரு தோத்திர சோடச கலாமாலை.

என்னினை வுற்றுப் கொல்லெனை யொப்பா
 ரில்லரோ விசைந்தனர் நின்பால்
அன்னவ ரைக்ப மானதெம் முறையோ
 வாய்ந்துணர்ந் தன்புபூண் டடியேன்
பன்னிய வழக்கு மோர்ந்தருள் புரிவாய்
 பரிசுத்த மருகுரு மணியே. (௪)

பரிசுத்த மனமும் பண்புறு தொண்டர்
 பணிகளு மன்னவ ருறவைத்
தரிசித்து வாழுஞ் செல்வமு நல்கித்
 தரணிகா மாதிக ளுடனே
விரிசித்தி கீர்த்தி புகழ்களை விரும்பா
 வித்தக ரடைந்தசிற் சுகமே
புரிசித்தி யாவுஞ் சூழ்கவீற் றிருக்கும்
 பொற்புறு மருகுரு மணியே. (௫)

பொற்புறு மெண்ணெண் கலைகளி னெஞ்சம்
 பொருந்திடா தறிவையோர்ந் தறிந்து
மற்பவெண் சித்தி யட்டயோ கங்க
 ளனைத்தையு மருவருத் துதறி
நற்பய னளிக்கு மைத்திரி யாதி
 நான்குட னுன்குசா தனங்க
ளெற்கருள் புரியின் றடுப்பவ ருளரோ
 வீசனே மருகுரு மணியே. (௬)

ஈசன்வே றியாம்வே றென்றிறு மாக்கு
 மியல்பின ரினமகன் றகண்ட
பூசனை புரியுந் தொண்டர்கட் கன்பு
 பூண்டவர் களிக்கவென் மனத்தில்
நேசமுற் றன்னோ ரருளிய ஞேய
 நிலையையா னம்பிமுற் சனன
வாசனை யவற்று ளல்லவை யகற்றும்
 வாமருள் மருகுரு மணியே. (௭)

# பூர்ணசந்திரோதயம்.

வரங்கள்பற் பலவா நின்புறத் துள்ள
வலிமையை யுணர்ந்தமெய் யன்பர்
குரங்கெனக் குதிக்கு நெஞ்சமு மொருவிக்
கூரமெய் வருந்திநின் மருங்கிற்
றிரம்பெற விருந்த சீரையு முணராத்
தீயபுந் தியிற்சிறந் தோங்குங்
கரங்குநேர் மனத்த னாயினுங் காக்கக்
கடனுள மருகுரு மணியே. (அ)

கடந்தவர் கருதும் பெரியநின் கடனென்
கடந்துள பற்பல சனனந்
தொடர்ந்துநீ யென்முன் றொன்றுமக் காலந்
தொக்குட லாவியும் பொருளு
மடர்ந்தென திடத்தே யங்கையி லேற்று
யற்புத வசுற்குநீ சாட்சி
படர்ந்தவெவ் வினையும் பார்வையா லோட்டும்
பாவக மருகுரு மணியே. (கூ)

சாட்சியுண் டனந்தஞ் சிற்சத்தி சாட்சி
சாமவே தமுமொரு சாட்சி
சாட்சியான் அடியார் சாட்சியா தலினுற்
சாமியென் புறத்துள நீதி
சூட்சிமேற் கூறுப் சிறியனிவ் வெளிய
தொண்டனென் றுன்னியாட் கொண்டு
மாட்சியுற் றுய்ந்த வடியர்பாற் கூட்டும்
வாழ்வருள் மருகுரு மணியே. (ய)

அருளுடை யானென் றறைதரு மறைக
ளாதியு மன்புசீர் சாலத்
தெருளுடை யாரு முரைத்ததை வினவிச்
சிந்தையிற் களிப்பெழுந் தெனது
மருளுடைந் தறிதற் கரியசிற் சுகத்தின்
வாழ்க்கையை யடைந்துய வெல்லாப்

# தமிழ்ப் புத்தகங்களின் விளம்பரம்.

| | | ரூ. அ. ப. |
|---|---|---|
| 1. | வேதாந்த சூளாமணி | 1—4—0 |
| 2. | பதஞ்சலியோக சூத்திரம் | 1—0—0 |
| 3. | இயேசுகிறீஸ்து என்பார் ஒழுகிக்காட்டிய ஒழுக்கமுறைநூல் | 1—0—0 |
| 4. | மாது ஸ்ரீ அங்கிபெஸண்ட் அம்மையாரின் யோக உபந்யாஸங்கள் | 0-12-0 |
| 5. | மனிதன் வமிசாவளியின் உண்மை | 0—8—0 |
| 6. | பிராசீன தர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும் | 0—6—0 |
| 7. | ஔவையார்யோகக்குறள் ( தமிழினின்று ஆங்கில மொழிபெயர்ப்பு) | 0—4—0 |
| 8. | ஸர்வசமய ஐகமத்ய ஸாரஸங்கிரகம் | 0—4—0 |
| 9. | இந்துமத தூஷணையின் பரிகாரம் | 0—4—0 |
| 10. | மௌனவாக்கு | 0—2—0 |
| 11. | ஸங்மார்க்கதீபம் | 0—2—0 |
| 12. | மாது ஸ்ரீ அனிபெஸண்ட் அம்மையார் சரித்திரம்(படத்துடன்) | 0—1—0 |
| 13. | மஹாலய பக்ஷமும் நவராத்திரியும் | 0—1—0 |
| 14. | எண்ணங்களின் இரஹஸியம் படத்துடன் | 0—1—0 |
| 15. | காயத்ரீ | 0—1—0 |
| 16. | காயத்ரீராமாயணம் (ஸமஸ்கிருதமூலமும் தமிழ்மொழிபெயர்ப்பும்) | 0-1-0 |
| 17. | மாது ஸ்ரீ ஹெலினாம்பாள் அம்மையார் சரித்திரம் | 0—0—6 |
| 18. | ஹிந்து என்பவன் எவன் ? | 0—0—6 |
| 19. | லோககுருவின் அவதாரங்கள் | 0—0—6 |
| 20 | பகவான் கௌதம புத்தரின் சரித்திரம் | 0—0—6 |
| 21. | வெள்ளியம்பலம் என்ற ஞானிகள் சங்கம் | 0—1—0 |
| 22. | மோனம் என்பது ஞானவரம்பு | 0—0—6 |
| 23. | உதாஸீந ஸாது ஸ்தோத்திரம் (ஸமஸ்கிருத மூலமும் தமிழ் மொழிபெயர்ப்பும்) | 0—6—0 |
| 24. | மஹாத்மாக்களும் அவர்களையடையும் மார்க்கமும் | 0—0—6 |
| 25. | தேவாலயம் | 0—0—3 |
| 26. | பிரஹ்மக்ஞானமும் பிரஹமக்ஞான சபையும் | 0—0—6 |
| 27 | ஸங்மார்க்கமுறையில் ஹிதோபதேசம் | 0—1—0 |

மேற்கண்ட புத்தகங்கள் தேவையானவர்கள் "மதுரை பிரஹ்மக்ஞாந ஸபை பிரஸிடெண்டு அவர்களுக்கு" அல்லது "மானேஜர் தியஸாபிகல் பப்ளிஷிங்ஹவுஸ், அடையாறு, சென்னை" என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம். 100 புத்தகங்களுக்கு 20 கமிஷன் கொடுக்கப்படும்.

பல கண்காட்சிகளில்
மெடல்கள்பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

# பி. சுப்பராய், ஆயுர்வேத

## ஔஷதசாலை,

ஸ்ரீ வெங்கடேசபெருமான் கோவில் சன்னதி, தஞ்சாவூர்.

தயவு செய்து
இதைத் தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

---

பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

25. சர்பத்துகள்:—திராக்ஷைப்பழம், நன்னாரிவேர், ரோஜா வாழைப்பழம், எலுமிச்சம்பழம், மாதளைப்பழம், கிச்சிலிப்பழம், பாதம், அன்னாசிப்பழம், துருஞ்சிப்பழம், கொமட்டிப்பழம், சீமை இலந்தைப்பழம், தாமரை புஷ்பம், இஞ்சி, சந்தனம், மாம்பழம், சர்பத்துகள். பழவகைகளின் சத்துக்களால் செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றையும் துளிகள் கணக்காகவே உபயோகிக்க வேண்டும். ஒரு சேர் குளிர்ந்த ஜலத்திலாவது, சோடா வாட்டரிலாவது, சுமார் 5 துளிகள் சேர்த்தால் மிகவும் இனிப்பாகவும், எந்த பழசர்பத்து உபயோகிக்கப்பட்டதோ, அந்த பழத்தின் மதுரமான வாசனையோடுகூடிய சர்பத்தாகும். ½ அவுன்சு சீசாக்களில் விற்கப்படும். இச்சிறு சீசாவிலுள்ள சர்பத்து 50 சேர் குளிர்ந்த ஜலத்துடனாவது, சோடாவாடரோடாவது சேர்த்தால் 50 சேர் உசிதமான சர்ப்பத்தாகும். அரை அவுன்சுள்ள சீசா 1-க்கு அணா 8, வி. பி. செலவுகள் 1-முதல் 3 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

---

என்னுடைய ஔஷதசாலையின் ஹெட் ஆபீசை பரங்கிப்பேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய் விட்டபடியால், இனி எல்லா ஆர்டர்களும், இப்பக்கத்தின் தலையில் அச்சிட்டிருக்கும் எனது ஹெட் ஆபீசாகிய தஞ்சாவூர் விலாசத்திற்கே எழுதக்கோருகிறேன். பரங்கிப்பேட்டைக்கு எழுத வேண்டாம்.